காலை முரசு

பக்கங்கள் 19

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆடி 24 வெள்ளிக்கிழமை 09.08.2024 | அதிர்வு 007

## நல்லூர் கந்தனுக்கு இன்று கொடியேற்றம்

(எஸ்.நிதர்ஷன்)



வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத் தின் பெருந் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10

04



# மாகாண சபைத் தேர்தல் சட்டம் மீது செப். 3 ஆம் திகதி இறுதி வாசிப்பு!

## சட்டங்களுக்கான நாடாளுமன்ற நிலையியல் குழுவில் இன்று பரிசீலித்த பின் இறுதி வடிவம் 21 இல் சபைக்கு

மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்காக, பழைய மாகாண சபைத் தேர்தல் சட்டங்களை மீள நடைமுறைக்குக் கொண்டு வரும் நோக்கில் எம்.ஏ. சுமந்திரன் எம்.பி. சமர்ப்பித்துள்ள தனிநபர் சட்டமூலம் எதிர்வரும் மூன்றாம் திகதி நாடாளுமன்றத்தில் இறுதியாக நிறைவேற்றப்படும் எனத் தெரியவருகின்றது.

பழைய மாகாண சபைத் தேர்தல் சட்டங்களை அப்படியே மீளக் கொண்டு வருவது தொடர்பான சுமந்திரன் எம்.பியின் தனிநபர் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டு, நாடாளுமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படுவதற்காக ஏற்கப்பட்டு, வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது.

04

# யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்துக்கு விசேட தர அதிகாரியை நியமிக்குக!

## அமைச்சைக் கோருகின்றது தேர்தல் ஆணையம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தகுதி நிலையுடைய தெரிவத்தாட்சி அலுவலர் ஒருவரிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைப்பதற்காக யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்துக்கு நிர்வாக சேவை விசேட தரத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவரை நியமிக்குமாறு பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சுக்குத் தேர்தல்கள் ஆணைக்குழு அவசர கடிதம் அனுப்பத் தீர்மானித்துள்ளது.




யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய இரு நிர்வாக மாவட்டங்களையும் உள்ளடக்கிய யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தின் இரு நிர்வாக மாவட்ட அரச அதிபர்களாக நிர்வாக சேவை

04




ஏழு கட்சிகள் - ஏழு பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கூடி, தங்களின் தமிழ்ப் பொது வேட்பாளராக அரியநேத்திரனைத் தேர்வு செய்து விட்டார்கள்.

'மலையைக் கெல்லி எலியைப் பிடித்த' சாதனைதான். அது பற்றிய மேல் விவரங்களை ஆறுதலாகப் பார்ப்போம்.

இனித்தான் பல விடயங்கள் வெளியே வரும். ஒட்டுக் குழுக்கள் குறித்து சம்பந்தனுக்கு அரியநேத்திரன் பகிரங்கமாகக் கூறிய விடயங்கள் என்று குறிப்பிட்டு சில பதிவுகளைக் கிளறித் தேடி எடுத்துக் கொண்டிருந்தார் ஒரு நண்பர். இனி அவையெல்லாம் வரிசையாகப் பல்லக்கில் பவனி வரும்.

04

# குடும்பஸ்தர் ஒருவர் குத்திப் படுகொலை!

(ஆ.ரமேஸ்)

வலப்பனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மஹாஊவா தோட்டம், 2ஆம் பிரிவில் நபர் ஒருவர் தாக்குதல் சம்பவத்தில் கூர்மையான கண்ணாடியால் குத்தப் பட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான கனிவண்ணன் என அழைக்கப்படும் ஆர்.ரவிச்சந்திரன் (வயது 45) என்பவரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள் ளார்.



இந்தக் கொலைச் சம்பவத்தின் பிரதான சந்தேகநபர் தலைமறை வாகியுள்ளார்.

அதேநேரம் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் ஒரு சந்தேகநபர் கைது செய்யப்பட்டு வலப்பனை நீதி மன்ற நீதிவானின் உத்தரவுக்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று சம்பவம் தொடர்பில் விசாரணை களை மேற்கொண்டு வரும் வலப்பனை பொலிஸார் தெரிவித்தனர்.



# யாழில் வீடுகளை எரித்த சம்பவம்: மூன்று சந்தேகநபர்கள் சிக்கினர்!

**அவர்களிடமிருந்து மோட்டார் சைக்கிள்கள், வாள்கள், பெற்றோல் குண்டுகள் மீட்பு**

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் வீடுகள் மீது தாக்குதல் நடத்தி எரித்த சம்பவம் தொடர் பாக மூன்று பேர் கைது செய்யப்பட்ட னர்.

யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸாரால் உரும் பிராய் பகுதியைச் சேர்ந்த 21 வயதான மூவர் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து 3 மோட்டார் சைக்கிள்கள், 2 வாள்கள், 4 பெற்றோல் குண்டுகள் என்பனவும் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

யாழ்ப்பாணம், திருநெல்வேலி பகுதியில் உள்ள வீடுகள் மீது நடத் தப்பட்ட வன்முறைத் தாக்குதல் மற்றும் தீ வைப்பு சம்பவங்கள் தொடர்பாகவே குறித்த கைது நடவடிக்கை முன்னெ டுக்கப்பட்டது.

வெளிநாட்டில் உள்ள ஒருவர் இலங் கையில் இருந்து இந்தியாவுக்குத் தப்பிச் சென்ற மற்றொருவர் மூலம் உள்நாட்டில் உள்ள நிஷா விக்டர் என்ற நபருக்குப் பணத்தை வழங்கி குறித்த தாக்குதல் களை மேற்கொண்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விசாரணைகளுக்குப் பின்னர் சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் முற் படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத் துள்ளனர்.




# நலம் நல்கும் நல்லைக் கந்தன் கொடியேற்றத் திருநாள் இன்று

உலக புகழ் பெற்ற நல்லூர் கந்தசு வாமி திருக்கோயில், இலங்கையிலுள்ள பிரசித்திபெற்ற கோயில்களில் ஒன்று.

அதன் வருடாந்த உற்சவம் கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. இது நல்லூர் உற்சவம் மட்டுமல்ல, ஈழத் தமிழர்களின் பண்பாட்டு விழுமிய பண்டிகையும் கூட.

தமிழர்கள் அதிகம் வசிக்கும் பகுதியான யாழ்ப்பா ணத்தில் நகர மையத்திலிருந்து சுமார் 3 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள கோயிலுக்கு உள்ளூர் பக்தர்கள் மட்டுமல்லாமல், வெளியூர் பக்தர்களும் வந்து வழிபடுகின்றனர்.

புலம்பெயர் தமிழர்கள் மட்டுமன்றி வெளிநாட்டவர்க ளும் நல்லூர் கந்தசுவாமி திருக்கோயில் உற்சவத் திற்கு வருகை தருவது வழக்கம்.

மிகவும் பிரபல்யம் வாய்ந்த இந்த கோவில் குறித்து உலகில் அறியாத வர்கள் யாரும் இருக்க முடியாது என கூறினால் மிகையாகாது.

கிழக்கு, தெற்கு, வடக்கு ஆகிய மூன்று திசைகளிலும் பெரிய கோபுரங் களுடன் கம்பீரமாகக் காட்சி தருகிறது கோயில்.

கிழக்கு கோபுரம் ஐந்து நிலைகளுடனும், தெற்கு மற்றும் வடக்கு கோபுரங்கள் ஏழு நிலைகளுடனும் காட்சியளிக்கின்றன.

தெற்கு கோபுரத்தின் அருகில் திருக்குளம் அமைந் திருக்கிறது. கிழக்கு கோபுரத்தின் முன்பு, அழகிய வேலைப் பாடுகளைக்கொண்ட தோரண வளைவு ஒன்றும் உள்ளது.

### நல்லூர் கந்தசுவாமி திருக்கோயில் வரலாறு

'யாழ்ப்பாண வைபவ மாலை', 'கைலாய மாலை' ஆகிய நூல்களில், யாழ்ப்பாணத்தை ஆண்ட கூழங்கைச் சக்கரவர்த்தியின் அமைச்சர்களுள் ஒருவரான புவனேக வாகு என்பவர் இந்தக் கோயிலைக் கட்டினார் என வரலாறு கூறுகின்றது.

இந்தக் கோயிலில் வியப்புக்குரிய செய்தி ஒன்றும் உள்ளது. கந்தசுவாமி கோயிலின் கருவறையில் மூலவராக முருகப்பெருமானின் திருவுருவம் இல்லை.

கருவறையில் முருகப்பெருமானின் ஆயுதமான வேல்தான் காணப்படுகின் றது. தன்னை நாடி வரும் பக்தர்களுக்குப் பாதுகாப்பு அரணாகத் திகழும் வெற்றி வேல் தான் இந்தக் கோயிலில் தெய்வ மாக கருதப் படுகின்றது.

திருவிழாக்களின்போது இந்த 'வேல்' வடிவத்தையே அலங்கரித்து, வாகனங்க ளில் எழுந்தருளச் செய்து வீதிவலம் வருகின்றனர்.

வருடம்தோறும் ஆடி, ஆவணி மாதங்களில் 27 நாள்கள் திருவிழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

ஆடி மாதம் அமாவாசைக்கு அடுத்த 6ஆம் நாள் கொடியேற்றத்துடன் தொடங்கும் திருவிழா, ஆவணி மாதம் அமாவாசையன்று தீர்த்தவாரியுடன் நிறைவு பெறும்.

24ஆம் நாள் தேரோட்டம் மிகவும் விமர்சையாக நடைபெறும். திருவிழாக் காலங்களில் பல்லாயிரக்கணக் கான பக்தர்கள் கூடுவார்கள்.

### கோவிலின் கலை அம்சம்

மாதம்தோறும் கிருத்திகையன்று வள்ளி, தெய்வானை இருபுறமும் இருக்க, வேலை சிறப்பாக அலங்கரித்து வழிபடுகின்றனர்.

மேலும் தைப்பூசம், மார்கழி திருவாதிரை, கந்த சஷ்டி ஆகிய விழாக்களும் நடைபெறுகின்றன. கோயிலின் வழிபாட்டு முறைகளை நெறிப்படுத்திய ஆறுமுக நாவலருக்கு நினைவு சின்னமாக மணிமண்ட பம் ஒன்றும் கோயிலுக்கு இடப்புறம் அமைந்துள்ளது.

மண்டபச் சுவர்களில் அறுபத்து மூவர் திருவுருவங்கள் வண்ண ஓவியங்களாக வரையப்பட்டிருக்கின்றன.

### பூஜை நேர விவரம்

இந்த மண்டபத்தில் ஆர்வமுள்ள குழந்தைகளுக்கு தேவாரப் பாடல்கள் பண்ணோடு கற்றுக் கொடுக்கின்றனர். கோயிலில் தினமும் அதிகாலை 4:30 மணிக்கு நடை திறக்கப்படுகிறது.

பின்னர் திருநல்லூர் முருகன் திருப்பள்ளியெழுச்சி பாடப்படுகிறது. தொடர்ந்து பூஜைகள் நடைபெறுகின்றன. மாலையில் நடைபெறும் பள்ளியறை பூஜை மிகவும் விசேஷமானது. முருகப்பெருமானுக்கு ஊஞ்சல் பாட்டுப் பாடி, சிறிய மஞ்சத்தில் வைத்துத் துயில்கொள்ளச் செய்கின்றனர்.

பள்ளியறை பூஜையைத் தரிசிக்க பக்தர்கள் திரளாக வருகின்றமை குறிப்பிடத்தக்கது. நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்குச் சென்று வழிபட்டால், மனநிம்மதியுடன் மகிழ்ச்சியாக வாழலாம் என்பது மெய்.

# சஜித்தின் கூட்டணிக்கு ஆதரவு வழங்குங்கள்!

## வடக்கு, கிழக்கு தமிழ்க் கட்சிகளுக்கு மனோ அழைப்பு

வடக்கு, கிழக்கு தமிழ்க் கட்சிகள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள ஐக்கிய மக்கள் கூட்டணிக்கு ஆதரவளிக்க வேண்டும் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. அழைப்பு விடுத்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள கூட்டணிக்கான உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு நேற்று கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்களில் நடைபெற்றது.

இந்தநிகழ்வில்உரையாற்றும்போதே மனோ கணேசன் எம்.பி. மேற்படி



அழைப்பை விடுத்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ மற்றும் ஏனைய மதங்களைச் சேர்ந்தவர்களும், சிங்களவர்களும், தமிழர்களும், முஸ்லிம்களும் இணைந்துள்ள இலங்கையர் கூட்டணியாக ஐக்கிய மக்கள் கூட்டணி உள்ளது. அனைவரும் இலங்கையர்களாக ஒன்றுக்கூட கூடிய இடமாக இந்தக் கூட்டணி உள்ளது.

அதேபோன்று நாட்டைக் கட்டியெழுப்பக் கூடிய மற்றும் பொருளாதாரம் தொடர்பில் நிபுணத்துவம் கொண்ட அணியும் எம்மிடமே உள்ளது.

வடக்கு, கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்க் கட்சிகள் நடைமுறைக்குச் சாத்தியமான தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள இந்த மகா கூட்டணியில் இணையுமாறும் அழைப்பு விடுக்கிறேன்.” – என்றார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினரான அரியநேத்திரன் கட்சியின் அனுமதியின்றி பொது வேட்பாளராகக் களமிறங்குவதை கட்சி எப்படிப் பார்க்கும், என்ன நடவடிக்கை எடுக்கும் என்பவற்றையெல்லாம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் நடைபெறும் கட்சியின் மத்திய குழுவின் கூட்டத்தில் கண்டறியக் கூடியதாக இருக்கும்.

தமிழரசு என்றதும் ஒரு விடயம் நினைவுக்கு வருகிறது.

சில தினங்களுக்கு முன்னர் நாடாளுமன்றத்துக்குள் குகதாசன், சாணக்கியன், சுமந்திரன், வினோதராதலிங்கம் போன்ற தமிழ் கூட்டமைப்பு எம்.பிக்கள் பக்கத்தில் அமர்ந்திருக்க அவர்களுக்கு நன்கு கேட்கக் கூடிய தொனியில், தொலைபேசியில் யாருடனோ சிறிதரன் எம்.பி. பேசிக் கொண்டிருந்தார். அவர்களுக்குக் கேட்க வேண்டும் என்று கருதித்தான் அப்படி பேசினாரோ, என்னவோ தெரியவில்லை.

“யார் என்றாலும் - அது தவராசா அண்ணனோ அல்லது அரியமோ - யார் என்றாலும் கட்சிக் கட்டுப்பாட்டை மீறி வேட்பாளரானால் கட்சி நடவடிக்கை எடுக்கும்” என்ற சாரப்பட கடுமையாக முழங்கிக் கொண்டிருந்தார் சிறிதரன் எம்.பி. என்று அதனை செவிமடுத்து கொண்டிருந்த எம்.பி. ஒருவர் குறிப்பிட்டார்.

அதனைக் கேட்டபோது ‘ரைட்டில்’ சிக்னல் போட்டு விட்டு ‘லெவ்டில்’ மடக்கி வெட்டும் பாணியிலான நம் அரசியல்வாதிகளின் போக்குதான் அது என்று எனக்கு மனதில் பட்டது.

தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்கும் முதல் பிரச்சாரக் கூட்டம் நாளை காலை கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெறுகின்றது. ஜோதிலிங்கம், கணேசலிங்கம், நிலாந்தன், யதீந்திரா என்று பொது வேட்பாளர் பிரச்சார முன்னணியினர் களம் இறங்குகின்றனர். கிளிநொச்சி மாவட்ட விவசாய, வணிக சம்மேளனங்களின் பெயரில் கூட்டப்படும் இந்த நிகழ்வுக்கான அழைப்பிதழ்கள் சிறிதரன் எம்.பியின் முத்திரையிடப்பட்ட உறைகளில் தான் கிளிநொச்சி எங்கும் அஞ்சல் செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டிருக்கின்றன. அது மாத்திரமல்ல, சிறிதரன் எம்.பியின் வழமையான செய்திகள் வெளியிடப்படும் வட்ஸ்அப் குழுமத்திலும் அந்த கூட்ட அழைப்பிதழ் பிரசாரப்படுத்தப்பட்டிருந்தது.

பொதுவேட்பாளர் திட்டத்தைத் தமிழரசு கட்சி ஆதரிக்கவில்லை. வரவேற்கவில்லை. ‘கட்சி முடிவுதான் எனது தீர்மானம்’ என்று கூறிக்கொண்டே சிறிதரன் எம்.பி. ‘ஸேம்சைட் கோல்’ அடிக்கின்றார். போதாக்குறைக்கு கட்சி முடிவை மீறி பொது வேட்பாளரானால் கடும் நடவடிக்கை என்று பசப்புரை வேறு.

இதைத்தான் ‘பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டி விடும் வேலை’ என்று கூறுவார்களோ...?

### நல்லூர்...

மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

இந்தப் பெருந்திருவிழாவில் எதிர்வரும் 18ஆம் திகதி பிற்பகல் 4.45 மணிக்கு மஞ்சத் திருவிழாவும், 26ஆம் திகதி மாலை 4.45 மணிக்கு கார்த்திகை திருவிழாவும், மறுநாள் 27ஆம் திகதி காலை 6.45 மணிக்கு சூர்யோற்சவமும் நடைபெறவுள்ளன.

தொடர்ந்து 23ஆம் திருவிழாவான எதிர்வரும் 31ஆம் திகதி பிற்பகல் 4.45 மணிக்கு சப்பரத் திருவிழாவும், செப்டெம்பர் முதலாம் திகதி காலை 6.15 மணிக்கு தேர்த்திருவிழாவும், அடுத்தநாள் செப்டெம்பர் 2ஆம் திகதி காலை 6. 15 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

### மாகாண சபைத்...

அது தொடர்பில் உயர்நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, அந்தச் சட்டமூலத்தை நிறைவேற்றுவது சம்பந்தமாக தனது பரிந்துரைகளை உயர் நீதிமன்றம் வழங்கியும் விட்ட நிலையில், அந்தச் சட்டமூலம் அரசு தரப்பினரால் ஒரு வருடத்துக்கு மேல் கிடப்பில் போடப்பட்டிருந்தது.

எனினும், பின்னர் அரசுத் தரப்புடன் ஏற்பட்ட இணக்கத்தின் அடிப்படையில் கடந்த 6ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரண்டாம் வாசிப்புக்காக நாடாளுமன்றத்தில் அச்சட்டமூலம் எடுத்துக்கொள்ளப்பட்டு, விவாதம் இன்றி, வாக்களிப்புக்கு விடப்படாமல், ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இப்போது உயர்நீதிமன்றப் பரிந்துரைகளுக்கு அமைவாக சட்டமூலத்தின் ஏற்பாடுகளைத் திருத்தம் செய்யும் நோக்கோடு, இன்று பிற்பகல் சட்டமூலங்கள் தொடர்பான நாடாளுமன்ற நிலையியல் குழுவில் அது பரிசீலிக்கப்படுகின்றது.

சட்டமூலத்தில் உயர்நீதிமன்றம் பரிந்துரைத்தபடியான மாற்றங்கள் இன்று செய்யப்பட்டதும், எதிர்வரும் 21ஆம் திகதி நாடாளுமன்றத்தில் அதனைச் சமர்ப்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பின்னர் இந்தச் சட்டமூலத்தை எதிர்வரும் செப்டெம்பர் 3 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் மூன்றாம் வாசிப்புக்காக எடுத்து அங்கீகரித்து, உடனடியாக சட்டமாக்குவதற்கு நேற்று நடைபெற்ற நாடாளுமன்றக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக அறியவந்துள்ளது.

### யாழ்ப்பாணம்...

தரம் 1ஐச் சேர்ந்தவர்களே இருப்பதனால் தேர்தல் காலத்தில் தகுதியுடைய ஒரு நிர்வாக சேவை விசேட தர அதிகாரியை தெரிவத்தாட்சி அலுவலராக நியமிக்குமாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தேர்தல்கள் ஆணைக் குழுவிடம் கோரிக்கை முன்வைத்திருந்தார்.

இதனை ஆராய்ந்த தேர்தல்கள் ஆணைக்குழு நிர்வாக சேவை விசேட தரத்தைச் சேர்ந்த ஓர் அதிகாரியை உடன் யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபராக நியமிக்குமாறு பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக்குக் கடிதம் எழுதத் தீர்மானித்துள்ளது.

இந்தத் தீர்மானத்தைத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் ஏ.எல். ரத்நாயக்கா நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுக்கு அறிவித்துள்ளார்.

# தொலைக்காட்சியில் செய்திகள் வாசித்த முதல் பெண் அறிவிப்பாளர் காலமானார்



இலன்ஹ்கையில் முதலாவது பெண் தொலைக்காட்சி செய்தி வாசிப்பாளரான சுமனா நெல்லம்பிட்டிய தனது 80 ஆவது வயதில் காலமானார்.

சிறிது காலம் சுகவீனமுற்றிருந்த அவர், நேற்று அதிகாலை காலமாகியுள்ளார்.

சுமனா நெலம்பிட்டிய தனது ஊடக வாழ்க்கையை ஆரம்பிக்கும் முன்னர் விமானப்படை அதிகாரியாகக் கடமையாற்றியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# முன்னாள் சிறைச்சாலை ஆணையர் எமில் ரஞ்சன் லமாஹேவா விடுதலை

வெலிக்கடை சிறைச்சாலைக்குள் 8 கைதிகள் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் சிறைச்சாலைகள் ஆணையாளர் எமில் ரஞ்சன் லமாஹேவாவை விடுதலை செய்வதற்கு உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

மூவரடங்கிய கொழும்பு விசேட மேல்நீதிமன்ற நீதிபதிகள் குழாம் 2022ஆம் ஆண்டு ஜனவரி 12ஆம் திகதி வழங்கிய மரணதண்டனைக்கு எதிராக எமில் ரஞ்சன் லமாஹேவாவினால் தாக்கல் செய்யப்பட்ட மேன்மறையிட்டு மனுவை பரிசீலித்த உயர் நீதிமன்றம் அவரை விடுதலை செய்ய உத்தரவிட்டுள்ளது.

விஜித் மலல்கொட, எஸ்.துரைராஜா, ஷிரான் குணரத்ன, அச்சல வெங்கப்புலி, பிரியந்த பெர்னாண்டோ ஆகிய ஐவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் மேன்முறையீட்டு மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

2012 நவம்பர் 9 மற்றும் 10ஆம் திகதிகளில் ஏற்பட்ட கலவரத்தின் போது 27 கைதிகள் உயிரிழந்த போதிலும், சட்ட மாஅதிபரால் வழக்கு தொடர்வதற்கு 8 பேர் கொலை செய்யப்பட்டமைக்கான சாட்சிகள் மாத்திரமே காணப்பட்டிருந்தன.

# அரச சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்திய 2 அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு இறுதி அறிவித்தல்




அரச சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்தியமை தொடர்பில் 2 அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு எதிராக இறுதி அறிவித்தல் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அரச சொத்துக்களை தவறாக பயன்படுத்தியமை தொடர்பிலான விடயங்களை ஆராய்வதற்காக அவர்கள் இருவரும் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அழைக்கப்பட்டுள்ளனர் என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தல் கண்காணிப்பாளர்கள் முதல்தடவையாக நேற்று முன்தினம் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அழைக்கப்பட்ட போதே இந்த விடயம் தெரியவந்துள்ளது.

அத்துடன், தேர்தல் கண்காணிப்பாளர்களுக்கான புதிய அளவுகோல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக ஜனநாயக மறுசீரமைப்பு மற்றும் தேர்தல் கண்காணிப்பு அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்க தெரிவித்துள்ளார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# மாகாணத் தேர்தல்கள் உறுதி

ஜனாதிபதி தேர்தல் களேபரங்கள், கெடுபிடிகள், ஆரவாரங்களுக்கு மத்தியில் ஒரு முக்கிய அரசியல் விவகாரம் சத்தம் சந்தடியின்றி - பெருத்த ஆரவாரங்களின்றி - வெளியே தெரியாமல் - நகர்கின்றது.

அது பற்றிய விடயம் அமுக்கி வாசிக்கப் படுவதற்கு இரண்டு காரணங்கள் தோன்றுகின்றன.

ஒன்று - விடயத்தை நகர்த்தும் தரப்பு, அதனை ஆரவாரப்படுத்தி, எதிர்தரப்புகளைச் சீண்டி, உசுப்பேத்தி, நிலைமையைக் குழப்பி விடாமல் காரியத்தை கனகச்சிதமாக - நாசூக்காக - ஒப்பேற்றி விட வேண்டும் என்ற திட்டத்தில் - எண்ணத்தில் - அசாத்திய மௌனம் காக்கின்றது. அமைதியாக விடயங்களை முன்னெடுக்கின்றது.

அடுத்தது - இன்னொரு தரப்போ, இந்த அரசியல் நகர்த்தலினால் அதனை நகர்த்தும் தரப்புக்கு அரசியல் நற்பெயர் - பெறுபேறு - சாதனை சான்றிதழ் - வந்துவிடக் கூடாது என்பதற்காக அது பற்றிய செய்திகள், விடயங்களை அமுக்கி வாசிக்க விரும்புகிறது.

இந்த இரண்டினாலும் விவகாரம் அமுங்கி நகர்கின்றது. என்ன அரசியல் விவகாரம் அது?

கடந்த ஏழு, எட்டு வருடங்களாக நடைபெறாத மாகாண சபைகளுக்கான தேர்தலுக்குரிய சட்டங்களை மீள நடைமுறைக்கு கொண்டு வரும் நடவடிக்கைதான் அது. அந்த நடவடிக்கை - செயல்பாடு - இனி தடைப்படாது, தடைப்பட முடியாது என்ற அளவுக்கு முன்னேறி முன் நகர்ந்து விட்டது.

வரும் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் மாகாண சபை தேர்தல்கள் தொடர்பான முன்னைய சட்டங்கள் மீண்டும் நடைமுறைக்கு வருவது பெரும்பாலும் உறுதியாகிவிட்டது. இந்த விடயத்தில் முக்கால் கிணறு ஏற்கனவே தாண்டியாகிய நிலையில், மிச்சக் கிணறைத் தாண்டுவதை பெரும்பாலும் இனி எந்த வகையிலும் தடுக்க முடியாது என்பதுதான் கள நிலைவரம்.

பழைய மாகாண சபை தேர்தல் சட்டங்களை அப்படியே மீளக் கொண்டு வருவது தொடர்பான சுமந்திரன் எம். பியின் தனிநபர் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டு, நாடாளுமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படுவதற்காக ஏற்கப்பட்டு, வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது. அது தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, அந்தச் சட்டமூலத்தை நிறைவேற்றுவது தொடர்பில் தனது பரிந்துரைகளை உயர்நீதிமன்றம் வழங்கியும் விட்ட நிலையில், அந்தச் சட்டமூலம் அரசு தரப்பினரால் ஒரு வருடத்திற்கு மேல் கிடப்பில் போடப்பட்டிருந்தது.

இவ்விடயம் தொடர்பில் சுமந்திரன் - சாணக்கியன் இணை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் நடத்திய பேச்சுகளின் அடிப்படையில், கடந்த செவ்வாய்க்கிழமை 6ஆம் தேதி இரண்டாம் வாசிப்புக்காக நாடாளுமன்றத்தில் அச்சட்டமூலம் எடுத்துக் கொள்ளப்பட்டு, விவாதம் இன்றி, வாக்களிப்புக்கு விடப்படாமல், ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இப்போது உயர்நீதிமன்றப் பரிந்துரைகளுக்கு அமைவாக சட்டமூலத்தின் ஏற்பாடுகளை திருத்தம் செய்யும் நோக்கோடு, இன்று பிற்பகல் சட்டமூலங்கள் தொடர்பான நாடாளுமன்ற நிலையியல் குழுவில் அது பரிசீலிக்கப்படுகின்றது.

சட்ட மூலத்தில் உயர்நீதிமன்றம் பரிந்துரைத்தபடியான மாற்றங்கள் இன்று செய்யப்பட்டதும், வரும் 21ஆம் திகதி நாடாளுமன்றத்தில் அதனைச் சமர்ப்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பின்னர் இந்தச் சட்ட மூலத்தை வரும் செப்டம்பர் மூன்றாம் திகதி நாடாளுமன்றத்தில் மூன்றாம் வாசிப்புக்காக எடுத்து அங்கீகரித்து, உடனடியாக சட்டமாக்குவதற்கு நேற்று நடைபெற்ற நாடாளுமன்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக அறிய வந்துள்ளது.

அதாவது ஜனாதிபதி தேர்தலுக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னரே மாகாண சபை தேர்தல்களுக்கான சட்டமூலம் நிறைவேறுவது பெரும்பாலும் 99 வீதம் உறுதியாகிவிட்டது.

# பவித்ரா வன்னியாராச்சியும் ஜனாதிபதி ரணிலின் பக்கம்



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைத் தாம் ஆதரிக்கவுள்ளார் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

கட்சி உறுப்பினர்கள், சமூக ஆர்வலர்கள் உள்ளிட்ட பல தரப்பினருடனான நீண்ட கலந்துரையாடல்களுக்குப் பின்னர் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

# கிராம உத்தியோகத்தர்களின் சங்கம் மீண்டும் பணிப்புறக்கணிப்பு முஸ்தீபு

அகில இலங்கை கிராம உத்தியோகத்தர்கள் சங்கம் இரண்டு நாள்கள் பணிப்புறக்கணிப்பை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் திங்கள் மற்றும் செவ்வாய்க் கிழமைகளில் கிராம உத்தியோகத்தர்கள் தங்களது அனைத்து சேவைகளிலிருந்தும் விலகியிருப்பார்கள் என அந்த சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜகத் சந்திரலால் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் இந்த பணிப்புறக்கணிப்பு, தேர்தல் பணிகளை எந்தவகையிலும் பாதிக்காது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.




கிராம உத்தியோகத்தர் சேவை யாப்பு வர்த்தமானியில் வெளியிடப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்படவுள்ளதாக அகில இலங்கை கிராம உத்தியோகத்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

# தனியார் நிறுவனங்களைப் புதிதாக பதிவு செய்வது நாட்டில் அதிகரிப்பு



2022 ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர், நாட்டில் புதிதாக தனியார் நிறுவனங்களது பதிவுகளின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு கணிசமான அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

நிறுவன பதிவாளர் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ புள்ளிவிவர அறிக்கையில் இந்த தரவு வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, இந்த ஆண்டின் முதல் 6 மாத காலப் பகுதியில் 12 ஆயிரத்து 651 புதிய வணிக நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

2023ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 10 ஆயிரத்து 520 புதிய நிறுவனங்களின் பதிவுகள் இடம்பெற்றுள்ளன என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜுன் மாதத்தில் மாத்திரம் 1,899 புதிய நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பொருளாதாரம் தொடர்ந்து மீண்டு வருவதால் தொழில்முனைவோர் மத்தியில் நம்பிக்கை ஏற்பட்டு வருவதாக அந்தத் தரவின் அறிக்கையில் தெரிவிக்கப்படுகின்றது.

# 3 ஆயிரத்து 694 இலங்கையர்கள் தென்கொரியாவில் வேலைவாய்ப்பு



இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 3 ஆயிரத்து 694 இலங்கையருக்கு தொழில் வாய்ப்புகளுக்காக தென்கொரியாவுக்கு சென்றுள்ளனர் என வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

மேலும் 100 பேர் அங்கு செல்வதற்குத் தயாராகவுள்ளனர் என அந்தப் பணியகம் தெரிவித்துள்ளது.

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்துக்கும் தென்கொரிய மனிதவள அபிவிருத்தி சேவை நிறுவனத்துக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு அமைய இவ்வாறு இலங்கை பணியாளர்களுக்கு அங்கு தொழில் வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன.

# அரிசிக்குத் தட்டுப்பாடு கிடையாது விவசாயத் திணைக்களம் அறிவிப்பு



இம்முறை சிறுபோகத்தின் போது 2 மில்லியன் தொன் நெல் அறுவடை செய்யப்படும் என விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

4 லட்சத்து 80 ஆயிரம் ஹெக்டயர் வயல் நிலப்பரப்பில் 77 சதவீதம் நாடு ரக நெற்செய்கை பண்ணப்பட்டுள்ளதாக அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

11 சதவீதம் சம்பா நெற்செய்கையும், 12 சதவீதம் கீரி நெற்செய்கையும் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

பெரும்போக நெல் அறுவடையும் நாட்டில் இருப்பதால் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்படாது என விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# சரஸ்வதி, மாதா சிலைகள் அமைக்க எடுத்த முயற்சியால் வவுனியா கோமரசன்குளம் பாடசாலையில் குழப்பநிலை







**(வவுனியா நிருபர்)**

வவுனியா, கோமரசன்குளம் பகுதியில் பாடசாலை ஒன்றில் இந்து வணக்க சிலை வைப்பதற்கு அனுமதிக்க முடியாது என பாடசாலை அபிவிருத்தி சங்கம் தெரிவித்த நிலையில் அங்கு குழப்ப நிலை நீடித்து வருகின்றது.

வவுனியா, கோமரசன்குளம் மகாவித்தியாலயத்தில் அதிகமாக இந்து மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். அந்த்ச் பாடசாலையின் அயலில் கிறிஸ்தவர்கள் அதிகமாக வாழ்ந்து வருகின்றனர்.


பாடசாலையில் இந்து மற்றும் கிறிஸ்தவம் என்பவற்றுக்கான காலைப் பிரார்த்தனை வழிபாட்டிடங்கள் கடந்த 8 வருடங்களுக்கு மேலாக காணப்பட்டு வரும் நிலையில் அதில் காட்சிப்படுத்தப்பட்டு இருந்த இந்து வழிபாட்டுப் படங்கள் பழுதடைந்து காணப்படுகின்றன.

இந்நிலையில் பாடசாலையின் பழைய மாணவர்கள் இந்து மாணவர்களின் வழிபாட்டிற்காக சரஸ்வதி சிலை ஒன்றைச் சிறிதாக வைப்பதற்கும் கிறிஸ்தவ மாணவர்களுக்கு மாதா சிலை ஒன்று வைப்பதற்கும் தீர்மானித்திருந்தனர்.

இந்நிலையில், பாடசாலையில் மத சிலையை வைக்க கூடாது எனவும் இது கிறிஸ்தவம், இந்து மதங்களுக்குள் குழப்பத்தை ஏற்படுத்தும் எனவும் கூறி அப் பகுதி மத போதகர் உட்பட சிலர் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். இது தொடர்பில் அப்பகுதி மத போதகரால் கடிதம் ஒன்றும் பாடசாலைக்கு வழங்கப்பட்டுள்ளது. இதனையடுத்து பாடசாலை அபிவிருத்திச் சங்கம் இந்து சிலை அமைக்க அனுமதி வழங்க மறுத்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் வவுனியா தெற்கு வலயத்தின் கவனத்திற்கும் கொண்டு செல்லப்பட்டுள்ளதாக பழைய மாணவர்கள் தெரிவித்துள்ளனர். பாடசாலையில் இரு மத சிலைகளும் வைப்பதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் எனவும் இந்து பிள்ளைகள் அதிகமாக கற்கும் பாடசாலையில் வழிபாட்டு உரிமை இல்லையா எனவும் பழைய மாணவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இது தொடர்பாக மதபோதகர் சதாஸ்கர் அவர்களைத் தொடர்பு கொண்டு கேட்ட போது, இந்த விடயம் குறித்து நானும் கேள்விப்பட்டேன் என அவர் தெரிவித்தார். கடிதம் கொடுத்தமை தொடர்பில் கேட்ட போது, அது பாடசாலைக்குத் தானே கொடுத்தது உங்களுக்கு சொல்ல வேண்டிய அவசியமில்லை எனக் கூறி தொடர்பை அவர் துண்டித்துள்ளார்.




# காஸா சிறுவர் நிதியத்திற்குச் சேர்ந்த நிதி பலஸ்தீனிய அரசாங்கத்திடம் ஒப்படைப்பு

காஸாவில் இடம்பெறும் யுத்த நிலைமை காரணமாக இடம்பெயர்ந்த சிறுவர்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக் கருவின்படி ஸ்தாபிக்கப்பட்ட 'காஸா சிறுவர் நிதியத்திற்கு' மேலும் 5 லட்சத்து 90 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் கிடைத்துள்ளன.

இந்தத் தொகையை பலஸ்தீன அரசாங்கத்திடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இது தொடர்பான உத்தியோகபூர்வ ஆவணங்களை இலங்கைக்கான பலஸ்தீன தூதுவர் கலாநிதி சுஹைர் எம். எச். ஸைத் மற்றும் ஐக்கிய நாடுகள் சபைக்கான நிவாரணப் பணி முகவர் நிறுவனத்தின் இலங்கைக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதி அசூசா குபோட்டா ஆகியோரிடம் ஜனாதிபதி கையளித்தார்.

யுத்த நிலைமை காரணமாக காஸாவில் சிக்கியுள்ள சுமார் ஒரு மில்லியன் சிறுவர்களின் அத்தியாவசிய செலவுகளை பூர்த்தி செய்வதற்காக இலங்கை அரசாங்கம் ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியை வழங்குவது தொடர்பில் 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 04 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வைத்த அமைச்சரவைப் பத்திரத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது.

கடந்த இப்தார் நிகழ்வுகளை நடாத்துவதற்காக அமைச்சுகள் மற்றும் அரச நிறுவனங்களால் ஒதுக்கப்பட்ட நிதியை இந்த நிதியத்திற்கு வழங்குமாறு ஜனாதிபதி விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க, அந்த நிதியத்திற்கு கிடைத்த ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்கள் முதற்கட்டமாக 04-01-2024 அன்று பலஸ்தீன அரசாங்கத்திற்கு நன்கொடையாக வழங்கப்பட்டது.

மேலும், ஜனாதிபதியின் வேண்டுகோளுக்கு இணங்க, வர்த்தக நிறுவனங்கள், பல்வேறு அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் இந்த நிதியத்துடன் கைகோர்த்து, நிதியத்திற்கு பங்களிப்பதற்கு அவகாசம் வழங்கப்பட்டதோடு அந்தக் காலக்கெடு 2024 ஜுலை 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது.

இதன்படி, 2024 ஜுலை 31 ஆம் திகதி வரை நிதியத்திற்குக் கிடைத்த 5 லட்சத்து 90 ஆயிரம் அமெரிக்க டொலர் தொகை நேற்று பலஸ்தீன அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பதில் வெளிவிவகார அமைச்சர் தாரக பாலசூரிய மற்றும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன ஆகியோர் கலந்துகொண்டனர்.

# தேர்தல் சட்ட மீறல் தொடர்பில் 121 முறைப்பாடுகள் பதிவாகின




தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் இதுவரை 121 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

இது தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

2024 ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு இதுவரை 22 வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

அங்கீகரிக்கப்பட்ட 11 கட்சிகளினதும் 10 சுயேச்சைக் குழுக்களினதும் வேட்பாளர்கள் இந்த தேர்தலில் போட்டியிட இதுவரைத் தயாராகியுள்ளனர்.



# மருத்துவத் திருத்தச் சட்ட மூலங்கள் சில திருத்தங்களுடன் நிறைவேற்றம்

மருத்துவ திருத்தச் சட்ட மூலங்கள் இரண்டு நேற்று நாடாளு மன்றத்தில் திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டன.

நாடாளுமன்றம் நேற்று காலை 9.30 மணிக்கு சபாநா யகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடியது. பிரதான நடவடிக்கைகள் நிறைவடைந்தமையைத் தொடர்ந்து 10.30 மணி முதல் இச்சட்டமூலங்கள் குறித்த இரண்டாவது மதிப்பீடு விவாதம் நடைபெற்றது.

இதன்போது குறித்த சட்ட மூலங்களின் முக்கியத்துவம் தொடர்பில் ஆளும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலர் கருத்துக் களை முன்வைத்தனர். விவாதம் முடிவடைந்ததும் குழு நிலையில் குறித்த சட்ட மூலங்களுக்கான திருத்தங்கள் முன்வைக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து இரு சட்டமூலங்களும் விவாதம் இன்றி திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டன.

மருத்துவக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கான இரு மருத்துவ திருத்தச் சட்டமூலங்களும் சுகாதார அமைச்சரி னால் கடந்த ஜூலை 02 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவில் திருடப்பட்ட 2 மோ. சைக்கிள்கள் மீட்பு

## மல்லாவி இளைஞன் கைது



(கே.வசந்தன்)

வவுனியாவில் இரு மோட்டர் சைக்கிள்கள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் மல்லாவி இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என வவுனியா பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

கடந்த செவ்வாய்கிழமை வவுனியா பழைய பஸ் நிலையத் திற்கு அருகில் நிறுத்தப்பட்டிருந்த மேடாட்டர் சைக்கிள் ஒன்றைக் காணவில்லை என அதன் உரிமையாளர் வவுனியா பொலி ஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

அந்த முறைப்பாடு தொடர்பில் வவுனியா தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகார் ஜெயக்கொடியின் வழிகாட்டலில் சப் இன்ஸ்பெக்டர் அகமட் தலைமையில் பொலிஸ் சார்ஜன்ட் டுகளான திசாநாயக்கா (37348), திலீபன் (6146), பொலிஸ் கான்ஸ்டபிள்களான உபாலி (10945), தயாளன் (9792), ரணில் (81010) உள்ளடங்கிய பொலிஸ் குழுவினர் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது மல்லாவியைச் சேர்ந்த 27 வயது இளைஞன் ஒருவனை சந்தேகத்தில் கைது செய்திருந்தனர். அவரி டம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையின் போது வவுனியா பழைய பஸ் நிலையத்திற்கு அருகில் திருடப்பட்ட மோட்டர் சைக்கிள் மீட்கப்பட்டது.

தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்ட விசாரணைக ளின் போது கடந்த ஜூன் மாதம் 29 ஆம் திகதி வவு னியா புதிய பஸ நிலையத்திற்கு அருகில் காணமல் போன மோட்டர் சைக்கிளும் மல்லாவியில் கண்டுபிடிக் கப்பட்டது.

இரு மோட்டர் சைக்கிள்களும் பொலிசாரால் மீட்கப் பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட இளைஞனை நீதிமன் றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலி ஸார் தெரிவித்தனர்.

# சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜனக சந்திரகுப்தவிற்கு நேற்று பிணை அனுமதி



தரமற்ற இம்யூனோகுளோபுலின் இறக்குமதி செய்யப்பட்ட குற்றச்சாட்டுத் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜனக சந்திர குப்தவிற்கு நேற்று பிணை வழங்கப்பட்டது.

அத்துடன், அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் வைத்தியர் சமன் ரத்நாயக்கவுக்கும் பிணை வழங்கப்பட்டுள்ளது.

எனினும், நேற்றைய நீதிமன்ற நடவடிக்கையின்போது இந்த குற்றச்சாட்டுடன் தொடர்புடைய முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல மற்றும் 3 சந்தேக நபர்கள் ஓகஸ்ட் 22 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

# வட மாகாணத்தில் சகல வைத்தியசாலைகளிலும் அவசர சிகிச்சைப் பிரிவுகள் நிறுவப்பட வேண்டும்

## ஆளுநர் சார்ள்ஸ் பணிப்புரை







வடக்கு மாகாண சுகாதாரத்துறை தொடர்பான விசேட கலந்துரையாடல் மாகாண ஆளுநர் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது. ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண சுகாதார நிர்வாக அதிகாரிகள் கலந்துக்கொண்டனர்.

மாகாண சுகாதார துறையில் காணப்படும் சிக்கல்கள், மேற்கொள்ள வேண்டிய பொறிமுறை மாற்றம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

வடக்கு மாகாணத்திலுள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் அவசர சிகிச்சை பிரிவை ஸ்தாபிக்குமாறு மாகாண சுகாதார நிர்வாக அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்த ஆளுநர், அந்த பிரிவிற்கான ஆளணியை நியமித்து உரிய பயிற்சிகளை வழங்குமாறும் ஆலோசனை வழங்கினார்.

அத்துடன் வைத்தியசாலைகளை ஒருங்கிணைப்பதற்கான தரவுப் பொறிமுறை ஒன்றை விரைவில் அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் கூறினார்.

சுகாதார துறைக்கு தேவையான ஆளணி, வளப்பற்றாக்குறை, தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கையை விரைவில் சமர்பிக்குமாறு மாகாண சுகாதார பணிப்பாளருக்கு ஆளுநர் பணிப்புரை விடுத்தார்.

# ஹல்தமுல்ல மாக்காந்த பகுதியில் காட்டு யானைகளின் அட்டகாசம்!














**(நடராஜா மலர்வேந்தன்)**

ஹப்புத்தல ஹல்தமுல்ல பிரதேசத்திற்குற்பட்ட மாக்காந்த (155 எண்) கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த ஆர்னோல் மற்றும் மாக்காந்த பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு காட்டு யானைகளின் தாக்குதலால் பெட்டிக்கடையொன்று சேதமடைந்துள்ளது.

கடந்த ஒரு வார காலப்பகுதியில் இரவு வேளைகளின் போது மூன்று தடவைகளில் காட்டுயானைகளின் தாக்குதல்களால் இரு குடியிருப்புகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

இதேவேளை பகல் வேளைகளிலும் யானைகளின் நடமாட்டம் காணப்படுவதால் இப்பகுதி மக்கள் அச்சத்திற்குள்ளாகியுள்ளனர்.

கடந்த காலங்களில் பூனாகல, மாக்காந்த பகுதிகளில் யானைகளின் தாக்குதலால் மனித உயிரிழப்புகளும் ஏற்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இதனால் காட்டு யானைகளின் அச்சுறுத்தல் நிலவுகின்ற இப்பகுதிகளில் யானைகளின் நடமாட்டத்தைக்கட்டுப்படுத்துவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு இப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.



# ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவவுக்கு யாழ்.அராலித் துறையில் நினைவஞ்சலி

லெப்டினனட் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவவின் 32 ஆவது நினைவு தினம் நேற்று யாழ்ப்பாணத்தில் இடம் பெற்றது.

யாழ்ப்பாணம் அராலித்துறையில் உள்ள கொப்பேகடு வவின் நினைவிடத்தில் எத நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது டென்ஸில் கொப்பேகடுவ உள்ளிட்ட உயிரி ழந்த முப்படையினருக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட கட்டளைத்தளபதி சந்தன விக்கிரமசிங்க உள்ளிட்ட முப்படை உயர் அதிகா ரிகள் கலந்துகொண்டனர்.

1992 ஆகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி விடுதலைப் புலிகள் யாழ் குடாநாட்டின் அராலித் துறையை அண்டி புலிகள் புதைத்து வைத்திருந்த நிலகண்ணி வெடிக்கு மேல் இராணுவ வாகன தொடரணி வாகனம் நிறுத்தப்பட்டதில் அது வெடித்து லெப்டினனட் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவ உள்ளிட்ட பல இராணுவத்தினர் உயிரிழந்தனர்.














# வேதாரண்யம் மீனவர்கள் மீது கடற்கொள்ளையர்கள் தாக்குதல்

வேதாரண்யம் மீனவர்கள் மீது, இலங்கை கடற்கொள்ளையர்கள் மேற்கொண்ட தாக்குதலில் காயமடைந்த மீனவர் ஒருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தமிழக மீனவர்கள் மத்தியில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நாகை மாவட்டம் வேதாரண்யம் அடுத்த ஆறுகாட்டுத்துறை மீனவ கிராமத்தில் இருந்து நேற்று முன்தினம் மதியம் விமலா என்பவருக்கு சொந்தமான பைபர் படகில் ஆறுகாட்டுத்துறையைச் சேர்ந்த பாக்கியராஜ், அமுதகுமார், அன்பழகன், சாணக்கியன், நாகராஜ் ஆகிய 5 மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்றனர்.


இரவில் கோடியக்கரைக்கு தென் கிழக்கே வலை விரித்து கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது அங்கு இயந்திரப் படகில் வந்த இலங்கையைச் சேர்ந்த 5 கடற்கொள்ளையர்கள் இவர்களது படகை வழிமறித்து படகில் ஏறி கத்தி, கம்பு உள்ளிட்ட ஆயுதங்களால் மீனவர்களை கடுமையாக தாக்கியுள்ளனர். பின்னர் படகில் இருந்த ஜி.பி.எஸ். கருவி, மீன்கள், செல்போன், டோர்ச்லைட் உள்ளிட்டவற்றையும் மீன்பிடி வலைகளையும் எடுத்துக்கொண்டு தப்பிச் சென்று விட்டனர். இதையடுத்து உடனடியாக 5 மீனவர்களும் அவசரமாக கரைக்குத் திரும்பினர்.

இலங்கை கடற்கொள்ளையர்கள் தாக்குதலில் தலையில் காயமடைந்த அன்பழகன் என்ற மீனவர் உள்ளிட்ட ஐந்து பேரும் வேதாரண்யம் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

அங்கு அன்பழகனுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. ஏனைய நான்கு மீனவர்களும் சிகிச்சை பெற்று வீடு திரும்பினர். இந்தச் சம்பவம் குறித்து வேதாரண்யம் கடலோர காவல் குழும பொலிஸார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

# மேற்குவங்க முன்னாள் முதல்வர் புத்ததேவ் பட்டாச்சார்யா காலமானார்



மேற்கு வங்க முன்னாள் முதல்வர் புத்ததேவ் பட்டாச்சார்யா (வயது 80) உடல்நலக்குறைவால் நேற்று காலமானார்.

மூத்த இடதுசாரி தலைவரும் மேற்கு வங்க முன்னாள் முதல்வருமான புத்ததேவ் பட்டாச்சார்யா கடந்த சில காலமாக உடல்நிலை பாதிக்கப்பட்டிருந்தார். சுவாசக் கோளாறு காரணமாக அடிக்கடி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

கடந்த ஆண்டு, அவருக்கு நிமோனியா பாதிப்பு ஏற்பட்டதையடுத்து, உயிர்காக்கும் மருத்துவக் கருவிகள் உதவியுடன் சிகிச்சை அளிக்கப்பட்டது. இந்த சிகிச்சையில் உடல்நலம் தேறி மீண்டு வந்தார். தொடர்ந்து அவரது உடல்நலம் சீராக இருப்பதாக சொல்லப்பட்டுவந்த நிலையில், நேற்று காலை தெற்கு கொல்கத்தாவில் உள்ள தனது இல்லத்தில் காலமானார். இதையடுத்து அவருக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டு வருகிறது.

முதல்வர் மம்தா பானர்ஜி விடுத்துள்ள இரங்கல் செய்தியில், “புத்ததேவ் பட்டாச்சார்யா உடன் பல தசாப்தங்களாக தொடர்பில் உள்ளேன். அவரின் இறப்புச் செய்தியால் நான் மிகவும் வருத்தமடைந்துள்ளேன். அவரின் மனைவி, மகன் மற்றும் சி.பி.எம். ஆதரவாளர்கள் அனைவருக்கும் எனது இரங்கல்கள்.” என்று தெரிவித்துள்ளார்.



# ஓய்வை அறிவித்தார் வினேஷ் போகத்



இந்திய மல்யுத்த வீராங்கனையான வினேஷ் போகத் மல்யுத்த போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

அவர் தமது எக்ஸ் தளத்தில் நேற்று காலை ஓய்வு குறித்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

இனி தமக்குப் போராட சக்தியில்லை. நான் தோற்று விட்டேன், மல்யுத்தம் வென்று விட்டது எனவும் அவர் தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், தயாரின் கனவும், தமது தைரியமும் உடைந்து போயுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் இறுதிச் சுற்றுக்கு முன்னேறி பதக்கத்தை உறுதி செய்திருந்த வினேஷ் போகத், நிர்ணயிக்கப்பட்ட எடையை விட 100 கிராம் கூடுதல் எடையுடன் காணப்பட்டதால் போட்டியிலிருந்து தகுதி நீக்கம் செய்யப்பட்டார்.

இந்தநிலையில், சர்வதேச விளையாட்டு நீதிமன்றத்தில் வெள்ளிப்பதக்கம் கோரி மேன்முறையீடு செய்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் மாநாடு திருச்சியில்

நடிகர் விஜய் தலைமையிலான, தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் மாநாடு திருச்சியில் இடம்பெறவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

பொன்மலை ஜீ கார்னரில் ரயில் நிலையத்திற்குச் சொந்தமான இடத்தில் இந்த மாநாடு நடத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கமைய, அந்த இடத்தை எதிர்வரும் செப்டம்பர் மாதம் 1 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரையில் வாடகைக்குத் தருமாறு கோரி, தமிழக வெற்றிக் கழகத்தின் பொதுச் செயலாளரினால் கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கட்சியின் முதல் மாநாட்டை நடத்துவதற்கு சிறுகனூர் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் அனுமதி கோரப்பட்ட நிலையில், அது நிராகரிக்கப்பட்டிருந்தது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மறைந்த முன்னாள் தமிழக



முதலமைச்சர் ஜெயலலிதா ஆகியோரும் தமது கட்சியின் முதல் மாநாட்டைத் திருச்சியில் நடத்தியிருந்தனர் என தெரிவிக்கப்படுகின்றது.

# பங்களாதேஷில் உள்ள இந்தியாவின் விசா மையங்கள் காலவரையின்றி மூடல்

பங்களாதேஷில் உள்ள இந்திய விசா மையங்கள் அனைத்தும் கால வரையின்றி மூடப்படுகின்றன என அறிவிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷின் பிரதமராக இருந்த ஷேக் ஹசீனா, உள்நாட்டு போராட்டம் மற்றும் கலவரம் காரணமாக கடந்த 5 ஆம் திகதி நாட்டை விட்டு வெளியேறி இந்தியாவில் தஞ்சமடைந்துள்ளார்.

ஷேக் ஹசீனா பிரதமர் பதவியை விட்டு விலக வேண்டும் என்ற ஒற்றை குறிக்கோளுடன் மட்டுமே தாங்கள் இருப்பதாக போராட்டக்காரர்கள் முன்பு தெரிவித்திருந்தனர். தற்போது அவர் பதவியை விட்டு விலகிய பிறகும் அங்கு நிலைமை மோசமாகவே உள்ளது.

தற்போது அங்கு செயல்படும் அரசு இல்லாத நிலையை பயன்படுத்தி சமூக விரோதிகள் பலரும் வன்முறையில் ஈடுபட்டு வருகின்றனர். குறிப்பாக, பங்களாதேஷில் உள்ள இந்து சிறு பான்மையினர் குறிவைக்கப்பட்டு வரு கின்றனர். இந்துக்களின் வீடுகளுக்குள் புகுந்து அவர்களின் உடமைகளை சமூக விரோதிகள் கொள்ளையடிக் கின்றனர் என செய்திகள் வெளியாகி வருகின்றன.

இந்த நிலையில், பாதுகாப்பு கருதி பங்களாதேஷில் உள்ள இந்தியர்களில் பலர் முன்கூட்டியே நாடு திரும்பினர். தற்போது அங்கு சுமார் 19 ஆயிரம் இந்தியர்கள் இருக்கின்றனர் எனவும் அவர்களில் 9 ஆயிரம் பேர் மாணவர்கள் என்றும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் நாடாளு மன்றத்தில் தெரிவித்துள்ளார்.



பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் இந்திய தூதரகம் இயங்கி வருகிறது. சிட்டகாங், ராஜ்ஷஹி, குல்னா, சில்ஹெட் ஆகிய நகரங்களில் துணை தூதரகங்கள் செயல்பட்டு வருகின்றன. எனினும், பாதுகாப்பு கருதி தூதரகம் மற்றும் துணை தூதரகங்களில் இருந்து அத்தியாவசியமற்ற அலுவலர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் சிறப்பு விமானம் மூலம் இந்தியா அழைத்து வரப்பட்டனர்.

இந்நிலையில், பங்களாதேஷில் உள்ள இந்திய விசா மையங்கள் அனைத்தும் காலவரையின்றி மூடப்படு கின்றன என அறிவிக்கப்பட்டுள் ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்தியில், "நிலையற்ற சூழ்நிலை காரணமாக, அனைத்து இந்திய விசா மையங்களும் மறு அறிவிப்பு வரும் வரை மூடப்பட்டிருக்கும். அடுத்த விண் ணப்ப திகதி எஸ்.எம்.எஸ். மூலம் தெரி விக்கப்படும். அடுத்த வேலை நாளில் பாஸ்போர்ட்டை பெற்றுக்கொள்ளலாம்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அம்மாவை பார்க்காமல் மனம் நொறுங்கியது

## ஷேக் ஹசீனா மகள் உருக்கம்

"என் அன்னையைப் பார்க்கவோ, அரவணைக்கவோ முடியாமல் மனம் நொறுங்கிவிட்டது."

– பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவின் மகள் சைமா வசேத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "பங்களாதேஷை நான் மிகவும் விரும்புகிறேன். எனது நாட்டில் ஏற்பட்டிருக்கும் உயிர் இழப்புகளால் மனம் வேதனை அடைந்துள்ளது. இந்த இக்கட்டான நேரத்தில் என் அன்னையை பார்க்கவோ, அரவணைக்கவோ முடியாத அளவுக்கு மனம் உடைந்துவிட்டது. அதேநேரத்தில், உலக சுகாதார நிறுவனத்தின் தென்கிழக்கு ஆசியாவின் பிராந்திய இயக்குநர் பொறுப்பை வகிப்பதில் உறுதியாக இருக்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷ் பிரதமராக இருந்த ஷேக் ஹசீனா, உள்நாட்டு போராட்டம் மற்றும் கலவரம் காரணமாக கடந்த 5 ஆம் திகதி நாட்டை விட்டு வெளியேறி இந்தியாவில் தஞ்ச டைந்துள்ளார். இதையடுத்து, தனது கருத்தை சைமா வசேத் முதல்முறையாக பதிவு செய்துள்ளார்.

உலக சுகாதார நிறுவனத்தின் தென்கிழக்கு ஆசியாவின் பிராந்திய இயக்குநரான சைமா வசேத், கடந்த பெப்ர வரியில்தான் அந்த பொறுப்பை ஏற்றார். இந்த பொறுப்பை ஏற்ற முதல் பங்களாதேஷை சேர்ந்தவர் இவர். அதோடு, இந்த பொறுப்பை வகித்த இரண்டாவது பெண் இவர்.

முன்னதாக ஜெர்மனி ஊடகம் ஒன்றுக்கு பேட்டி அளித்திருந்த ஷேக் ஹசீனா மகன் சஜீப் வசேத் ஜாய்,

"பங்களாதேஷில் பிரதமராக ஐந்து முறை தேர்ந்தெடுக் கப்பட்டவர் எனது அம்மா. அவரும் அவரது குடும்பத்தினரும் யாருக்காக இவ்வளவு செய்தார்களோ, அந்த நபர்கள் தாக்குதலை நடத்துவார்கள் என்றும், அதன் காரணமாக அங்கிருந்து வெளியேற வேண்டிய நிலை ஏற்படும் என்றும் அவரால் நம்ப முடியவில்லை. அவர் மிகுந்த மன வருத்தத்தில் உள்ளார்.




அவர் அமெரிக்கா அல்லது பிரிட்டனில் புகலிடம் பெறுவார் என்பதெல்லாம் வதந்திகள். அவர் இன்னும் அது குறித்து முடிவு எடுக்கவில்லை. அவர் டில்லியில் சிறிது காலம் தங்கப் போகிறார். எனது சகோதரி எனது அம்மாவுடன் இருக்கிறார். அதனால், அவர் தனியாக இல்லை.

பங்களாதேஷை விட்டு வெளியேற எனது அம்மா விரும்பவில்லை. நாங்கள் அவரை சமாதானப்படுத்த வேண்டியிருந்தது. வங்கதேசத்தில் நடந்த போராட்டம் என்பது அரசியல் இயக்கம் அல்ல. அது ஒரு கும்பல்." என தெரிவித்திருந்தார்.



# ரஷ்யாவின் அணு உலையினை கைப்பற்றும் முயற்சியில் உக்ரைன்



ரஷ்யாவிற்குள் சுமார் 15 கிலோ மீற்றர் வரை ஊடுவியுள்ள உக்ரைன் படையினர் அப்பகுதியிலுள்ள அணு உலையை கைப்பற்றலாம் என்ற தகவல் வெளியாகிய நிலையில் ரஷ்ய ஜனாதிபதி புடின் கடும் அச்சத்தில் உள்ளார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

உக்ரைன் 300 படைவீரர்களையும், 11 கவச வாகனங்களையும், 20 கவச தாக்குதல் வாகனங்களையும் வடகிழக்கு எல்லையைத் தாண்டி ரஷ்யாவுக்குள் அனுப்பியுள்ளதாக ரஷ்ய இராணுவமும் தெரிவித்துள்ளது.

ரஷ்யாவின் குர்ஸ்க் பகுதியில் உக்ரைன் படையினரின் எல்லை தாண்டிய தாக்குதல் புதன்கிழமையும் தொடர்ந்ததால் அங்கு அவசர நிலை பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

தற்போதைய பிராந்திய ஆளுநர் அலெக்ஸி ஸ்மிர்னோவ், "எதிரி படைகள் பிராந்தியத்திற்குள் வருவதால் ஏற்படும் விளைவுகளை அகற்ற இந்த நடவடிக்கை அவசியம் ."– என்றார்.

ஊடுருவல் தொடங்கியதில் இருந்து குறைந்தது ஐந்து பொதுமக்கள் கொல்லப்பட்டதாகவும், 31 பேர் காயமடைந்துள்ளதாகவும், அவர்களில் ஆறு குழந்தைகள் என ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்தனர்.

செவ்வாயன்று காலை, 1,000 உக்ரைனிய படையினர், அத்துடன் 11 டாங்கிகள் மற்றும் 20 க்கும் மேற்பட்ட கவச போர் வாகனங்கள், சுட்ஜா நகருக்கு அருகில் ரஷ்யாவுக்குள் நுழைந்ததாக மொஸ்கோ தெரிவித்துள்ளது.

செவ்வாய்க்கிழமை முழுவதும் பல கிராமங்களில் சண்டை நடந்ததாகக் கூறப்படுகிறது, உள்ளூர் அதிகாரிகள் குடியிருப்பாளர்களை தங்கள் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துமாறு வலியுறுத்தினர் மற்றும் அனைத்து பொது நிகழ்வுகளும் இரத்து செய்யப்பட்டன.

நேற்று முன்தினம் அரசாங்க அதிகாரிகளுடனான ஒரு தொலைக்காட்சி சந்திப்பில், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் உக்ரைன் பெரிய ஆத்திரமூட்டல் மற்றும் கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்துவதாக குற்றம் சாட்டினார்.

# இன்றைய ராசி பலன்கள் -09.08.2024




இன்று செயல்கள் அனைத்தும் சுமூகமாக நடக்கும். உங்கள் வீட்டில் விருந்தினர் வருகை காரணமாக இன்று நீங்கள் உற்சாகத்துடன் இருப்பீர்கள். அவர்களுடன் சேர்ந்து மகிழும் வாய்ப்பு பெறுவீர்கள். இன்று அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் இருக்கும்.

உங்கள் கடின உழைப்பின் காரணமாக உங்கள் பணியில் வளர்ச்சி காண்பீர்கள்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் மகிழ்ச்சியான மனநிலையில் இருப்பீர்கள். இதனால் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்ள முடியும்.

இன்று பண வரவு காணப்படுகின்றது. உங்கள் பொருளாதார நிலை சிறப்பாக இருக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று நீங்கள் பொறுமையுடன் இருக்க வேண்டும். மற்றவர்களுடன் பேசும் போது பாதகமான விளைவுகள் ஏற்படா வண்ணம் வார்த்தைகளை கவனித்துப் பேச வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

உங்கள் பணியில் குறைந்த அளவு திருப்தியே காணப்படும். தவறுகள் செய்ய வாய்ப்புள்ளது.

உங்களின் பதட்டமான மனநிலை காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். நல்ல புரிந்துணர்வுக்கு நட்பான அங்குமுறை வேண்டும்.

இன்று நிதிநிலைமை லாபம் தரும் வகையில் அதிர்ஷ்டகரமாக இருக்காது. தொண்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் இன்றைய நாளை அர்த்தமுள்ளதாக்கிக் கொள்ளலாம்.

பல் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே . பற்களை நன்கு பாதுகாக்க வேண்டும்.உணவில் கவனம் தேவை




இன்று சற்று மந்தமான நாளாக இருக்கும். சவால்கள் நிறைந்து காணப்படும் நாள் என்பதால் உங்கள் உணர்வுகளை கட்டுப்படுத்த வேண்டும். மனக் குழப்பங்களை நீக்கி தெளிவாக இருக்க வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. பணிகளைக் கையாள்வதைக் கடினமாக உணர்வீர்கள்.

உங்களின் நேர்மறையான உணர்வுகள் காரணமாக உங்கள் துணையிடம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்வீர்கள். இதனால் உறவில் அமைதியும் திருப்தியும் நிலவும்.

அதிக பணம் சம்பாதிக்கும் வாய்ப்பும் கணிசமான தொகை சேர்க்கும் வாய்ப்பும் இன்று குறைவு. இன்று அதிர்ஷ்டமும் உங்களுக்கு சாதகமாக இல்லை.

வயிற்று வலியால் நீங்கள் பாதிக்கபடலாம். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தியானம் மற்றும் பிரார்த்தனை மேற்கொள்வது சிறந்த பலனைத் தரும்.




இன்று உங்கள் இலக்குகளில் வெற்றி கிடைக்கும் நாள். உங்களின் நேர்மையான முயற்சி மூலம் உங்களிடம் மறைந்திருக்கும் திறமைகளை நீங்கள் உணரும் நாள். இன்று முக்கிய முடிவுகளை நீங்கள் எடுக்கலாம்.

உங்கள் செயல் திறனில் உங்கள் திறமை வெளிப்படும். நீங்கள் தொடர்ந்து கடின முயற்சி செய்து உங்கள் திறமைகளை மேம்படுத்துவீர்கள்.

உங்கள் இருவரிடையே புரிந்துணர்வு குறைந்து காணப்படும். இதனால் உறவில் திருப்தியான நிலை இருக்காது.

இன்று பணபுழக்கம் அதிகமாக காணப்படும். இந்தப் பணத்தை ஆடம்பரப் பொருள்கள் வாங்கப் பயன்படுத்தலாம்.

உங்களிடம் சிறந்த ஆற்றல் காணப்படும். எனவே உங்கள் தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்காது. உங்கள் அன்றாட செயல்களில் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். பிறரிடம் உரையாடுவதற்கு முன் ஒன்றுக்கு இரண்டு முறை யோசித்து உரையாடுங்கள். பிரார்த்தனை மூலம் உங்களுக்கு மன ஆறுதல் கிடைக்கும்.

உங்கள் சக பணியாளர்களைக் கையாள்வதை கடினமாக உணர்வீர்கள். பொறுமையாக விஷயங்களைக் கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். உங்கள் துணையிடம் எதிர்மறையான உணர்வுகளை வெளிப்படுத்துவதை தவிர்க்கவும்.

பணபுழக்கம் போதிய அளவில் இருக்காது. உங்கள் நெருங்கிய நபர் ஒருவரின் திடீர் மருத்துவ செலவை சந்திக்க நேரும்.

கண் எரிச்சல் ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது. கண்களுக்கு மருத்துவ சிகிச்சை மேற்கொள்வது சிறந்தது.




இன்று நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டும். யதார்த்தமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். உங்கள் உடன் பிறந்தவர்களால் தொல்லையும் பிரச்சினைகளும் ஏற்படும். இன்று அவர்களை தவிர்ப்பது நல்லது.

பணியிடச் சூழல் சாதகமாக இருக்காது. கடினமாக உழைத்தாலும் உங்கள் உழைப்புக்கு தகுந்த அங்கீகாரமும் நன்மதிப்பும் கிடைக்காது.

உங்கள் துணையிடம் பேசும் போது அமைதியைக் கடைபிடிக்கவும். சில சமயங்களில் நீங்கள் அமைதி இழக்க நேரலாம். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கப்படும்.

இன்று பணப்புழக்கம் போதிய அளவு காணப்படாது. பொறுப்புகள் அதிகரிக்கும் காரணத்தால் அதிகம் செலவு செய்ய நேரும்.

பதற்றம் காரணமாக கழுத்து விறைப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று உங்கள் லட்சியங்களை அடைவதற்கு சாதகமான நாள் அல்ல. இன்று கவலையுடன் காணப்படுவீர்கள். இன்று நீங்கள் சமயோசித புத்தியுடன் செயல்பட வேண்டும். உங்கள் இலக்குகளை அடைவதில் உறுதியாக இருக்கவேண்டும்.

இன்று அதகப் பணிகள் காரணமாக சோர்ந்து போவீர்கள். எனவே பணிகளை திட்டமிட்டு செய்ய வேண்டும். அப்பொழுதான் அதற்குரிய பலன் கிடைக்கும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சிப் பூர்வமாக நடந்து கொள்வீர்கள். உறவில் நல்லிணக்கம் பேண இத்தகைய உணர்ச்சிகளை தவிர்ப்பது நல்லது.

பணப்புழக்கம் அதிகமாக இருக்காது. பணத்தை முடிந்த அளவு சேமிக்க நீங்கள் சிக்கன நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

உணவில் கவனம் செலுத்துவது அவசியம். நல்ல ஆரோக்கியத்தை பராமரிக்க காரமான சூடான உணவுகளை தவிர்க்க வேண்டும்.




உங்கள் முயற்சிகளில் வெற்றி அடைய இன்று கடினமாக உழைக்க வேண்டும். நீங்கள் வெற்றி பெறுவதற்கு தன்னம்பிக்கை அவசியம். உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களின் நன்மதிப்பை பெறுவீர்கள். நல்ல பலன் காணப் பிரார்த்தனை மேற்கொள்ளுங்கள்.

பணிகளைக் கையாளும்போது உங்கள் திறமைகளை வெளிபடுத்துவீர்கள். உங்கள் பணிக்கு தகுந்த அங்கீகாரமும் நன் மதிப்பும் பெறுவீர்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் நேர்மையாகவும் நேரடியாகவும் நடந்து கொள்வீர்கள். இதனால் உறவில் மகிழ்ச்சியை பராமரிக்க முடியும்.

நிதிநிலையில் இன்று அதிர்ஷ்டம் காணப்படும். உங்கள் வங்கியிருப்பு உயரும் வாய்ப்பு உள்ளது.

உங்கள் தன்னம்பிக்கை காரணமாக இன்று நீங்கள் துடிப்புடனும் ஆற்றலுடனும் காணப்படுவீர்கள். அதனால் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் -09.08.2024

## தனுசு

இன்று உங்களுக்கு விருப்பமான பலன்கள் கிடைக்கும். உங்கள் இலக்குகளை குறைந்த முயற்சியில் செய்து முடிப்பீர்கள். புதிய முதலீடுகள் நன்மை அளிக்கும். உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

பணியிடத்தில் சுமூகமான பலன்கள் கிடைக்கும். கடினமான பணிகளைக் கூட எளிதாக செய்து முடிப்பீர்கள். உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை விரைந்து செய்து முடிப்பீர்கள்.

உங்கள் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும். இதனால் உங்கள் துணையிடம் மகிழ்ச்சி காண்பீர்கள்.

இன்று போதிய பண வரவு காணப்படும். உங்கள் குடும்ப அபிவிருத்திக்காகச் செலவு செய்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் சிறந்த மனநிலை மற்றும் புத்துணர்ச்சி காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## மகரம்

இன்று முன்னேற்றகரமான நாளாக இருக்காது. நீங்கள் உற்சாகத்தையும் மகிழ்ச்சியையும் கடைபிடிக்க வேண்டும். எது நடக்கிறதோ அதை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும். இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக அமைய இறை வழிபாடு மற்றும் பிரார்த்தனையை மேற்கொள்ளுங்கள்.

அதிகப் பணிகள் காரணமாக அதிருப்தி காணப்படும். உங்கள் மேலதிகாரிகளுடன் பிரச்சினைகளை சந்திப்பீர்கள். பணிகள் அதிகம் காணப்படுவதால் ஒய்வு கிடைப்பது அரிது.

உங்கள் மனதில் குழப்பமான உணர்வுகள் காணப்படும். இதன் காரணமாக உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

இன்று பணபுழக்கம் குறைந்து காணப்படும். நிதியைப் பொறுத்த முக்கிய முடிவுகள் எடுப்பதை இன்று தவிர்க்க வேண்டும். பணத்தை கையாளும் போது கவனம் தேவை.

உங்கள்தாயின்உடல்நலத்திற்காகபணம்செலவுசெய்ய நேரும். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.

## கும்பம்

இன்று முன்னேற்றகரமான பலன்கள் இருக்காது. உங்கள் மனக் குழப்பமும் வளர்ச்சியில் தடையை ஏற்படுத்தும். இது உங்களுக்கு பாதகமாக இருக்கும்.

பணியிடத்தில் திருப்திகரமான பலன்கள் காணப்படாது. அதிக வேலை காரணமாக உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பதை கடினமாக உணர்வீர்கள். பணிகளை மேற்கொள்ளும்போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபட நேரலாம். எனவே இன்று மகிழ்ச்சியுடன் இருக்க நட்பான உறவை பகிர்ந்து கொள்வது நல்லது.

இன்று பணபுழக்கம் குறைவாக காணப்படும். உங்கள் பொறுப்புகள் அதிகமாக இருக்கும். பணப்பற்றாக்குறை காரணமாக உங்கள் உடனடி தேவைகளை பூர்த்தி செய்ய இயலாது.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. அஜீரணக் கோளாறு ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.

## மீனம்

இன்று உங்களுக்கு சாதகமான நாள். நம்பிக்கை நிறைந்து காணப்படும் நாள். கடின உழைப்புக்கு வெற்றி கிடைக்கும் நாள். நீங்கள் எடுக்கும் முடிவுகள் நல்ல பலன்களை அளிக்கும்.

பணியிடத்தில் திருப்தியான சூழல் காணப்படும். கடினமான உழைப்பின் மூலம் நற்பெயரும் அதன் மூலம் நன்மதிப்பும் பெறுவீர்கள்.

உங்கள் குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும். உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை பராமரிப்பீர்கள்.

இன்று நிதிநிலையில் அதிர்ஷ்டம் காணப்படும். உங்கள் பணத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள். அதிர்ஷ்டம் காரணமாக நிதிநிலையில் முன்னேற்றம் காணப்படும்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று முழுவதும் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

